1613
1612

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 04 | தமிழ்மொழி | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|
| | சுட்டெண்................................................................................ | |

**பகுதி - I**

**01) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. எப்போதும் வீதியில் நடந்து செல்ல வேண்டிய பக்கம்
   1. இடதுபக்கம் 2. வலதுபக்கம் 3. எந்தப்பக்கமும்

2. நெல்லிற்கு அரிசி போல உழுந்திற்கு
   1. சோறு 2. சதை 3. பருப்பு

3. கடிதத்தை அனுப்புபவரின் கையெழுத்து இடவேண்டியது
   1. இடதுபக்கம் 2. வலதுபக்கம் 3. மேற்பக்கம்

4. வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கைப் படிமுறையில் மயிர்க்கொட்டியாக தோற்றம் பெறும் காலம்
   1. குடம்பி 2. நிறையுடலி 3. முட்டை

5. அரண்மனையின் பணிக்கு அமர்த்தப்படுபவர்.
   1. அரசர் 2. அமைச்சர் 3. மகாராசா

6. இருளை ஒளியால் நிரப்பிய மாமனிதர்.
   1. மார்க்கோணி 2. கிரகம்பெல் 3. தோமஸ் அல்வா எடிசன்

7. ஐம்பது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. பொன்விழா 2. வெள்ளிவிழா 3. வைரவிழா

8. செய்திகளைத் திரட்டித் தருபவர்
   1. அதிபர் 2. நிருபர் 3. இதழ் ஆசிரியர்

9 "யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" எனப் புகழ்ந்து பாடியவர்?
   1. ஔவையார் 2. சுப்பிரமணிய பாரதியார் 3. திருவள்ளுவர்

10. பின்வரும் சொற்களுள் சினைப் பெயரைக் குறிப்பது
   1. கண்டி 2. திங்கட்கிழமை 3. செவி

(10×2=20 புள்ளிகள்)

**02) தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான விடையை கட்டத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. திசை என்பதன் ஒத்த கருத்துச் சொல்
2. அரசன் வாழும் இடம்
3. முக்கனிகளுள் ஒன்று
4. தெருக்கள் சந்திக்கும் இடம்
5. அறிவைத் தருவது

| | | | |
|---|---|---|---|
| அ | ட | ப | லா |
| ர | க | ல் | வி |
| ண் | ச | ந் | தி |
| ம | ஊ | சி | க் |
| னை | ச | ங் | கு |

(5×1=5 புள்ளிகள்)

**03) சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து எழுதுக.**

1. நடத்துநர் / நடத்துனர் - ..........................................................................
2. தொளிற்சாழை / தொழிற்சாலை - ..........................................................................
3. முயற்ச்சி / முயற்சி - ..........................................................................
4. முதலாளி / முதளாழி - ..........................................................................
5. ஆராட்சி / ஆராய்ச்சி - ..........................................................................

(5×1=5 புள்ளிகள்)


kalvi.lk

**04)**

| |
|---|
| **அழைப்பிதழ்** |
| **பாரதி வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர் தினவிழா** |
| **காலம் : 28. 11. 2019**<br>**நேரம் : காலை 10.00 மணி**<br>**இடம் : பாடசாலையின் பிரதான அரங்கு** |
| **இந்நிகழ்வில் ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.** |
| **ஏற்பாடு : அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்** |

1. இவ்வழைப்பிதழ் எவ்விழாவிற்கானது?

   ..........................................................................................................

2. இவ்விழா எப்போது நடைபெறவுள்ளது?

   ..........................................................................................................

3. இவ்விழாவின் ஏற்பாட்டாளர்கள் யாவர்?

   ..........................................................................................................

(3×2=6 புள்ளிகள்)

**05) பின்வரும் வாக்கியங்களைத் தரப்பட்ட முடிக்கும் சொற்களுக்கான வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. அவன் மடமட வெனத் தண்ணீர் குடித்தான்.

   ......................................................................................... குடித்தார்கள்

2. பூனை எலியைப் பிடித்தது.

   ......................................................................................... பிடித்தன

3. நீ நன்கு பரீட்சை எழுதினீரா?

   ......................................................................................... எழுதினீர்களா?

(3×2=6 புள்ளிகள்)

**06) பொருத்தமான அடைமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்குக.**

1. யானை அசைந்து அசைந்து வந்தது.

.......................................................................................................................................

2. சிறுவன் படம் வரைந்தான்.

.......................................................................................................................................

3. கிளி பழத்தைக் கொத்தியது.

.......................................................................................................................................

(3×2 = 6 புள்ளிகள்)

**07) தரப்பட்ட சொற்றொடர்களுக்கான தனிச் சொல்லை எழுதுக.**

1. நம்ப முடியாத கதை - ........................................
2. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - ........................................
3. மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் - ........................................
4. ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவர்கள் - ........................................
5. ஒரே தாய்வயிற்றில் பிறந்த பிள்ளைகள் - ........................................

(5×2 = 10 புள்ளிகள்)

**08) தரப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஓர் எழுத்துத் தெரிவு செய்து புதிய சொல்லை எழுதுக.**

1. அம்மி அரவு சங்கு கள்வன் ........................................
2. தீபாவளி நத்தார் அப்பா பாம்பு ........................................
3. பெட்டி அன்பு சிற்பி கல்வி ........................................

(3×2 = 6 புள்ளிகள்)

**09) பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.**

1. விருட்சம் - ........................................
2. கவலை - ........................................
3. புள் - ........................................
4. தடாகம் - ........................................

(4×2 = 8 புள்ளிகள்)

kalvi.lk

**10) பிராணிகளின் ஒலிகளை எழுதுக.**

1. ஆந்தை - ....................................................
2. கோழி - ....................................................
3. நரி - ....................................................
4. யானை - ....................................................
5. குயில் - .................................................... (5×2=10 புள்ளிகள்)

**11) பொருத்தமான சொற்களைத் தெரிந்து வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

(வாடிவதங்கி, துள்ளித்துள்ளி, அல்லும் பகலும்)

ஆட்டுக்குட்டி ........................................................................................ ஓடியது.

விவசாயி பயிர் செய்கையில் ........................................................ பாடுபட்டான்.

சந்தையில் காய்கறிகள் ............................................................ காணப்பட்டன.

(3×2 = 6 புள்ளிகள்)

**12) கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.**

அற்ற குளத்தில் ........................................................ பறவை போல்


உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் ........................................................

கொடியும் ........................................................ நெய்தலும் போலவே

ஒட்டி உறுவார் உறவு

(3×2 = 6 புள்ளிகள்)

**13) காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**



1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................

(2×3 = 6 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන